DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :236/2026**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness - 1 (LW -1)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திரு.ராமச்சந்திரன்** | Caste | : | |
| Father Name | : | **திரு.** | Calling | : | **காவல் துறை பணி ஓய்வு** |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **20.07.2026.**

**PW -1 (LW -1 )**

**(1-**வது எதிரி ஆஜர் இல்லை**.** மற்ற எதிரிகள் ஆஜர்**.) (**சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்**.)**

**முதல் விசாரணை:**

நான் கடந்த 10.08.2016–ம் தேதி வயலூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது காலை 08.30 மணிக்கு போலீஸ் பார்ட்டியுடன் இரட்டை ஆலமரம் குழுமி பகுதியில் ரோந்து பணியில் இருந்த பொழுது ஆஜர் எதிரிகள் கட்டான், அருவாள், கம்பி ஆயுதங்களை கையில் வைத்து கொள்ளையடிக்க இருந்ததை கண்டுபிடித்து அவர்களை ஆய்வாளர் கைது செய்து ஆயுதங்களை கைப்பற்றி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**எ.த.கு.வி :**

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் போலீஸ் விசாரணையின் போது கைப்பற்றியதாக சொல்லப்படும் அடையாளங்கள் பற்றி எதுவும் கூறியுள்ளீர்களா? |

II ADDL COURT, TRICHY

| | |
|---|---|
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | எந்த எந்த எதிரி கையில் எந்த எந்த ஆயுதங்கள் இருந்தது என்பது பற்றி ஆய்வாளர் விசாரணையின் போது சொன்னீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | எதிரிகள் குறிப்பாக எந்த இடத்தில் கூடியிருந்தார்கள் என்பது பற்றி ஆய்வாளர் விசாரணையில் சொன்னீர்களா? |
| **பதில்** | சொல்லியுள்ளேன். |
| **கேள்வி** | எதிரிகள் என்ன உடைகள் அணிந்திருந்தார்கள் என்பது பற்றி விசாரணையில் சொல்லியுள்ளீர்களா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | இந்த வழக்கு பதிவு செய்வதற்கு முன்பு எதிரிகளை பற்றி முன்னரே உங்களுக்கு தெரியும் என்றால்? |
| **பதில்** | தெரியும். |
| **கேள்வி** | எதிரிகள் மீது எத்தனை வழக்குகள் நிலுவையில் உள்ளன? |
| **பதில்** | இருக்கிறது. தற்பொழுது ஞாபகம் இல்லை. |

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 20.07.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 20.07.2026

II ADDL COURT, TRICHY